ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2270/28 - 2022 මාර්තු මස 09 වැනි බදාදා - 2022.03.09

2270/28 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: பல/2/1/10 (ii).
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03J/94/107.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

காலி மாவட்டத்தில், பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 17ஏ, கொஸ்கொடை கிராம அலுவலர் பிரிவில், கொஸ்கொடை கிராமத்தில் அமைந்துள்ள அளவையார் அதிபதியால் தயாரிக்கப்பட்ட, கா. 3943 உம் 2022.01.31 ஆந் திகதிய சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள சுமார் 0.4675 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய அதுவெல எனும் காணியின் வடக்கு பகுதியான புஞ்சி லியத்த அல்லது பொடி ஸனீகே கொடுவ மற்றும் அத்தனவலவத்தை எனும் காணி கொஸ்கொடை பொலிஸ் நிலையத் துக்காக எடுத்துக் கொள்ளல்:

**01. துண்டு இல. 01 - காணியின் பெயர் : அதுவல காணியின் வடக்கு பகுதி புஞ்சி லியத்த அல்லது பொடி ஸனீகே கொட்டுவ மற்றும் அத்தனவல வத்தை; விஸ்தீரணம் : 0.4675 ஹெக்டயார்**

வடக்கு : யகம சோமவதீ த சில்வா மற்றும் பலர் உரிமை கூறும் பகினிகஹலியத்த வீதி மற்றும் வீதிகள் (வீ. அபி. அ. சபை); கிழக்கு : வீதிகள் (வீ. அபி. அ. சபை) மற்றும் வீதி; தெற்கு : வீதியும் டீ. ஏ. பெரேரா உரிமை கூறும் தம்பி தொட்ட பதிஞ்சி வத்த; மேற்கு : டீ. ஏ. பெரேரா உரிமை கூறும் தம்பி தொட்ட பதிஞ்சி வத்தை மற்றும் கால் வீரவர்தன உரிமை கூறும் எலன் மெண்டிஸ் பதிஞ்சி வத்தையும் யகம சோமவதீ த சில்வா உரிமை கூறும் பகினிகஹலியத்த.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.05.09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.05.04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர்.எம்.ஐ.பி.எம்.சி.பி. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
பலபிட்டிய.

பிரதேச செயலகம்,
பலபிட்டிய,
2021, மாச்சு 04.

EOG 03 - 0803